


## 12. 09. 2025

### தலைப்பு செய்திகள்

1. நாட்டின் 15ஆவது குடியரசு துணை தலைவராக திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் இன்று பதவி ஏற்றார்.

2. புதுதில்லியில் கையெழுத்து பிரதிகளை மின்னணு மயமாக்கும் சர்வதேச மாநாட்டில் பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்றுமாலை சிறப்புரையாற்றுகிறார்.

3. நிலக்கரி துறையில் பணியாற்றும் சுரங்க தொழிலாளர்கள் பயன்பெறும் வகையிலான 3 அறிவிப்புகள் வரும் 17ஆம் தேதிமுதல் நடைமுறைபடுத்தப்படும் என்று மத்திய அமைச்சர் திரு.கிஷன்ரெட்டி தெரிவித்துள்ளார்.

4. முந்திரி சாகுபடியை அதிகரிக்கும் வகையில் கடலூரில் தமிழ்நாடு முந்திரி வாரியம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மாநில வேளாண் அமைச்சர் திரு.M.R.K.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

5. ஹாங்காங் ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் இரட்டையர் அரையிறுதிக்கு இந்தியாவின் ரான்கிரெட்டி, சிராக்ஷெட்டி இணை முன்னேறியுள்ளது.

### இனி விரிவான செய்திகள்

*********

**குடியரசு துணை தலைவர்**

நாட்டின் 15ஆவது குடியரசு துணை தலைவராக திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் இன்று பதவி ஏற்றார்.

குடியரசு தலைவர் மாளிகையில், குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவருக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

**வாய்ஸ்**

பிரதமர் திரு.நரேந்திரமோடி, மத்திய அமைச்சர்கள் திரு.ராஜ்நாத்சிங், திரு.அமித்ஷா உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

குடியரசு துணை தலைவராக பதவி ஏற்றபின்னர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன், ராஜ்கட்டில் தேசபிதா மகாத்மா காந்தியடிகளின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினார்.

*********

**வாழ்த்து**

குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணனுக்கு வாழ்த்து தெரிவித்த பிரதமர் திரு.நரேந்திரமோடி, தேச கட்டமைப்பு, சமூகசேவை, ஜனநாயக மதிப்பீடுகளுக்கு தம் வாழ்வை அர்ப்பணித்த திரு.ராதாகிருஷ்ணனின் பதவிக்காலம் சிறப்பாக அமைய வாழ்த்தியுள்ளார்.

உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா, மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் உள்ளிட்டோரும் திரு.சி.பி.ராதாகிருஷ்ணனுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

*********

**பிரதமர்**

பிரதமர் திரு.நரேந்திரமோடி புதுதில்லியில் இன்றுமாலை கையெழுத்து பிரதிகளை மின்னணு மயமாக்கும் கியான்பாரதம் சர்வதேச மாநாட்டில் சிறப்புரையாற்றுகிறார்.

இதுசார்ந்த மின்னணு தளத்தையும் பிரதமர் அறிமுகம் செய்கிறார்.

கையெழுத்து பிரதிகளை மின்னணுமயமாக்கி அதனை பாதுகாத்து, பொதுமக்கள் அவற்றை பயன்படுத்த இந்நடவடிக்கை வழிகோலுகிறது.

நாட்டின் பாரம்பரிய அறிவுசார் திறனின் கலாச்சார பெருமையை மீட்டெடுத்து உலக அளவில் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் குறித்தும் இம்மாநாட்டில் விவாதிக்கப்படுகிறது.

இதையொட்டி நடைபெறும் கண்காட்சியில் அரிய எழுத்து பிரதிகள், உள்ளிட்டவை காட்சிபடுத்தப்படுகின்றன.

*********

**கிஷன்ரெட்டி**

நாட்டின் நிலக்கரி உற்பத்தியில் கனிம வளங்கள் முக்கிய பங்காற்றுவதாக மத்திய நிலக்கரி கனிம வளத்துறை அமைச்சர் திரு.ஜி.கிஷன்ரெட்டி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் சுயசார்பு பாரதம், தொடர்பாக இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த 11 ஆண்டுகளில் பல்வேறு சீர்திருத்தங்களுடன் நல்லாட்சியை இலக்காக கொண்டு நிலக்கரி அமைச்சகம், தொடர் சீர்திருத்தங்களை செயல்படுத்தியதாக குறிப்பிட்டார்.

இலகுவான வர்த்தகம், நிலையான பொருளாதார வளர்ச்சியை நோக்கமாக கொண்டு பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு வளர்ச்சி அடைந்த பாரத பாதையில் உள்ளடக்கிய முன்னேற்றத்தை உறுதி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டார்.

நாட்டில் உள்ள 140 கோடி இந்தியர்களின் நலத்தை கருத்தில் கொண்டு மத்திய அரசு அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதாக கூறிய அவர், நிலக்கரி துறையில் உற்பத்தியை அதிகரிக்க உயர் முன்னுரிமை வழங்கப்படுவதாக குறிப்பிட்டார்.

நிலக்கரி துறையில் பணியாற்றும் சுரங்க தொழிலாளர்கள் உள்ளிட்டோர் பயன்பெறும் வகையிலான 3 அறிவிப்புகள் வரும் 17ஆம் தேதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்றார்.

இதன்படி பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கான சீருடை திட்டம்,

ஊழியர்களுக்கான கருணை தொகை 25 லட்ச ரூபாயாக அதிகரிப்பு,

நிரந்தர மற்றும் தற்காலிக பணியாளர்களுக்கு ஒருகோடியே 40 லட்சம் ரூபாய் வரை கூடுதல் காப்பீடு உள்ளிட்டவை இதில் அடங்கும் என்றார்.

கனிம துறையில் முறைகேடுகள் மற்றும் உயிரிழப்புகளை தடுக்க புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகம் செய்யப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

*********

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் மாணவர்கள் மட்டும் பயணிக்கும் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

இந்த சிறப்பு பேருந்து திட்டத்தை போக்குவரத்து துறையினர் தொடர்ந்து கண்காணித்து மேலும் சிறப்புற செயல்படுத்த அவர் கேட்டுக்கொண்டார்.

*********

சரக்கு சேவைவரி

மத்திய அரசின் அடுத்த தலைமுறைக்கான சரக்கு சேவைவரி சீர்த்திருத்தங்கள் வரும் 22-ம் தேதி நடைமுறைக்கு வரவுள்ள நிலையில், பொதுமக்களின் வரிசுமை பெரிதும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நுகர்வோர் பயன்படுத்தும் பால், நெல், கோதுமை பருப்பு வகைகளுக்கு முற்றிலும் வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்றும், ஆயுள் காப்பீடு மற்றும் சுகாதார காப்பீடு பிரீமியங்களுக்கும் வரி ரத்து

செய்யப்பட்டுள்ளது என்றும் சரக்கு சேவைவரியின் உதவி ஆணையர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

*********

**எம்.ஆர்.கே பன்னீர்செல்வம்**

தமிழகத்தில் முந்திரி உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் கடலூரை தலைமை இடமாக கொண்டு தமிழ்நாடு முந்திரி வாரிய அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மாநில வேளாண் அமைச்சர் திரு.M.R.K.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் 12 உறுப்பினர்களை கொண்டு இவ்வாரியம் அமைக்கப்பட்டுள்ளதாகவும், இதன் செயல்பாடுகள் மூலம், முந்திரி தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவரும் பயன்பெறுவார்கள் என்று குறிப்பிட்டார்.

இந்நடவடிக்கைகளால் முந்திரி தொழில் மேலும் வளர்ச்சிபெறும் என்று அமைச்சர் கூறியுள்ளார்.

*********

**சட்டமன்ற உறுதிமொழி குழு**

தமிழ்நாடு சட்டமன்ற உறுதிமொழி குழுவினர் அதன் தலைவர் திரு.வேல்முருகன் தலைமையில் தூத்துக்குடி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இன்று ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

புதிதாக கட்டப்பட்டுள்ள டைடல் தொழில்நுட்ப பூங்கா,

தூத்துக்குடி தீயணைப்பு மீட்பு பணித்துறை

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலையும் இக்குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர்.

*********

**இருவரி**

**தமிழகம் முழுவதும் பொதுவிநியோக திட்ட சிறப்பு** முகாம் நாளை நடைபெறுகிறது.

குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல் நீக்கம் முகவரி மாற்றம் உள்ளிட்ட திருத்தங்களை இதில் மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாட்டில் ஆசிரியர் தகுதி தேர்விற்கு** மொத்தம் 4 லட்சத்து 80 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளதாக ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவித்துள்ளது.

வரும் நவம்பர் 15 ஆம் தேதி முதல் தாளும், 16ஆம் தேதி இரண்டாம் தாளும் நடைபெற உள்ளது.

**தூத்துக்குடி மீன்வள கல்லூரியில் கெண்டை** மீன் வளர்ப்பு மற்றும் இனப்பெருக்க தொழில்நுட்பம் குறித்த பயிற்சி வரும் 15ஆம் தேதிமுதல் நடைபெற உள்ளதால் விருப்பமுடையோர் இதில் பங்கேற்று பயன்பெற அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**சிவகங்கை மாவட்டத்தில் தேசிய பெண்** குழந்தைகள் தினத்தை முன்னிட்டு வீர தீர செயல்புரிந்த 13 முதல் 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகள் வரும் 29ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திருமதி.பொற்கொடி தெரிவித்துள்ளார்.

**ஈரோடு மாநகராட்சி சார்பில் இன்று நடைபெற்ற** பிளாஸ்டிக் தவிர்ப்பு விழிப்புணர்வு பேரணியில் 700க்கும் மேற்பட்ட பள்ளி கல்லூரி மாணாக்கர் 2 கிலோ மீட்டர் தூரம் வரை ஊர்வலமாக சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

**நெல்லை மாவட்டம் திசையன்விளை** தினசரி சந்தையில் இன்று நேரிட்ட தீ விபத்தில் 10 லட்ச ரூபாய் மதிப்பிலான பொருட்கள் தீக்கிறையாயின.

தீவிபத்திற்கான காரணம் குறித்து விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

நீலகிரி மாவட்டம் குன்னூரில் லாம்ப்ஸ் ராக் டால்.'.பின் நோஸ் காட்சி முனைகள் பராமரிப்பு பணிகள் காரணமாக இன்றுமுதல் தற்காலிகமாக மூடப்படுவதாக வனத்துறை அறிவித்துள்ளது.

*********

**தர்மபுரி**

தர்மபுரி மாவட்டத்தில் மாணாக்கரின் நலன்கருதி கல்வி கடன் வழங்கும் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சதீஸ் தெரிவித்துள்ளார்.

**வாய்ஸ்**

*********

**அணை**

திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனூர் அணையிலிருந்து உபரிநீர், தென்பெண்ணை ஆற்றில் வெளியேற்றப்படுவதால் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

*********

**வானிலை**

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம் மாவட்டங்களிலும், புதுவையிலும் இன்று கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென் தமிழக கடலோர பகுதிகள், மன்னார் வளைகுடா, குமரிக்கடல் பகுதியில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் வரும் 16ஆம் தேதிவரை இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

*********

**பேட்மிட்டன்**

ஹாங்காங் ஒப்பன் பேட்மிட்டன் **ஆடவர்** இரட்டையர் அரையிறுதிக்கு இந்தியாவின் ரான்கிரெட்டி, சிராக்ஷெட்டி இணை முன்னேறியுள்ளது.

காலிறுதியில் இந்த இணை – மலேசிய இணையை 21-14 20-22 21-16 என்ற செட்களில் இன்று வென்றது.

ஆடவர் ஒற்றையர் காலிறுதியில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி - லக்ஷயாசென்னை இன்று எதிர்கொள்கிறார்.

*********

**மகளிர் ஹாக்கி**

சீன ஹாங்சூவில் நடைபெறும் ஆசிய கோப்பை மகளிர் ஹாக்கி போட்டியில் இந்தியா நாளை ஜப்பானை எதிர்கொள்கிறது.

*********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**